RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

OPEN ACCESS

# ராஜம்கிருஷ்ணன் சிறுகதைகளில் இடர்ப்படும் பாத்திரங்களின் மனவோட்டம்

பெ. ஜெயமாலா [அ, *], மோ. ரூபா [அ]

[அ] முதுகலைத் தமிழியல் மற்றும் உயராய்வுத் துறை, செல்லம்மாள் மகளிர் கல்லூரி, கிண்டி, சென்னை - 600 032, தமிழ்நாடு, இந்தியா

# Psychological Responses to Adversity in Rajam Krishnan's Short Stories

P. Jayamala [a, *], M. Roopa [a]

[a] PG Tamil and Research Department, Chellammal Women's College, Guindy, Chennai-600032, Tamil Nadu, India

* Corresponding Author: deshikarevathi90@gmail.com

Received: 03-12-2025
Revised: 19-02-2026
Accepted: 08-03-2026
Published: 17-03-2026

Check for updates

**ABSTRACT**

Rajam Krishnan occupies a significant position in Tamil literature as a pioneering writer who engaged directly with the lived realities of communities by conducting field-based observation and gathering experiential data for her literary works. He contributed extensively to diverse literary genres, including novels, plays, short stories, biographies, and essays. Her short stories, in particular, vividly represent the everyday experiences, struggles, and psychological states of ordinary people. This study examines the mental and emotional responses of characters confronted with adversity in Rajam Krishnan's short fiction. Particular attention is given to the experiences of working-class people, the position of women within the family, the exercise of authority by dominant economic groups, social domination over vulnerable individuals, and various forms of oppression. Through the psychological experiences of her characters, Krishnan exposes the relationship between individual suffering and the broader structures of social power and inequality. The study argues that her short stories not only portray the external realities of marginalized lives but also illuminate the inner conflicts, emotional struggles, and psychological consequences produced by social and familial oppression. Thus, Rajam Krishnan's short fiction provides a significant literary space for understanding the intersection of individual psychology, social hierarchy, gender relations, economic power, and oppression in Tamil society.

**Keywords:** Rajam Krishnan, Tamil society, Ordinary people, Social hierarchy

## முன்னுரை

தமிழ் எழுத்துலகில் தடம் பதித்த பெண் எழுத்தாளர்களில் குறிப்பிடத்தகுந்தவர் ராஜம்கிருஷ்ணன் அவர்கள். அவர் எழுத்துலகில் கள ஆய்வு செய்து வேறுபட்ட நூல்களை படைத்தப் பெருமையினை தன்னகத்தே கொண்டவர். பல்வேறு விருதுகளுக்கு சொந்தக்காரர். அத்தகையவர் காலத்தால் அழியாப் புகழை தமிழுலகிற்குத் தந்து தானும் புகழ்நிலை அடைந்தவர். அத்தகு பெருமை நிறைந்த அறிஞரின் சிறுகதைகளில் பெற்றோர் இல்லாத சிறுவன் சந்திக்கும் இன்னல்கள் கூறும் ஊசியும் உணர்வும், தவறான துணையால் ஒரு பெண் படும் துன்பங்களைக் காட்டும் குடும்பம் ஆகிய இருகதைகளில் இன்னல்களை சந்திக்கும் ஜோகி, சீலி, வசு ஆகிய பாத்திரங்களின் மனவோட்டாங்களைப் பற்றி இக்கட்டுரை வழி அறியலாம்.

## பெற்றோரின் முக்கியத்துவம்

இப்பூவுலகில் தரிக்கும் அனைத்து உயிர்க்கும் வாழ்வதற்கு அடிப்படை ஆதாரம் உணவு, உடை, இருப்பிடம் போன்று வாழ்க்கை பாதையில் பயணிக்க அடிப்படை வழிகாட்டிகள் பெற்றோர். அவர்கள் நம் வாழ்விற்கான அடித்தளம் அமைத்து கொடுப்பவர். அதனுடன் நமது வலிமைக்கொண்டு வாழ்வில் வரும் இடர்ப்பாடுகளை கைக்கொள்ள வேண்டும். அடிப்படை இல்லையெனில் வாழ்க்கை அல்லல்பட்டுவிடும். ஆயிரம் உறவுகள் உடனிருந்தாலும் தாய், தந்தை உறவுக்கு இணை ஏதுமில்லை. ஊசியும் உணர்வும் என்கிற சிறுகதையில் ஜோகி கதாப்பாத்திரம் பெற்றோர் இல்லாத சிறுப்பிள்ளையாகப் படைக்கப்பட்டுள்ளான்.

ஜோகி தனக்கு எழுந்த ஆசையை தான் சம்பாத்தித்தும் வாங்க முடியாத சூழ்நிலை, ஆசையை தள்ளிப்போட வைத்தது பெற்றோரின் வெற்றிடத்தை நினைவு கோருகிறது. ஜோகி ஆசைப்பட்ட குழல் மாமன் மரியனிடம் இருந்தும் அதை நேரடியாக எடுத்து வாசிக்க முடியாது மறைமுகமாக வாசிக்கும் பாங்கு பெற்றோர் இருந்திருந்தால் அச்சிறுவனுக்கு குழல் வாங்கி தந்திருப்பர் சுதந்திரமாக வாசித்து இருப்பான் என்பது பெறப்படுகிறது. அத்துடன் குழந்தை தொழிலாளியாகி

“ஏண்டா உனக்கு மாசம் பதினைந்து ரூபா சம்பளம் கொடுத்துத் தண்டத்துக்கா வைச்சிருக்கு?”1

என்று முதலாளியின் அதிகாரம், அதட்டல்களுக்கு ஆளாகியிருக்க மாட்டான் என்பது மேலும் பெறப்படுகிறது.

## விவரம் இன்மையால் ஜோகி படும் வேதனைகள்

குழல் ஊதுவதில் நாட்டத்தை செலுத்தி மகிழ்ந்து கவனம் தவறியதால் பிற மாட்டை கவனிக்க தவறுகிறான். மாடு பயிரில் இறங்கியது. அதனால் முதலாளியின் வீணான பேச்சுக்கு ஆளாகுவது, கூடுதலாக மாமன் மரியனின் தேவையற்ற திமிரான கோபத்திற்கு பலியாகுதல் ஆகியவை சிறுவனின் விவரமற்ற தன்மையை உணர்த்துகிறது. கிழிந்த கோணியைத் தைப்பதற்கு வாங்கிய ஊசிநூல் பெற்ற இடத்தில் விழுந்திருக்கும் என்பதை யோசனை இல்லாது மாட்டின் வாய், கழுத்து, வயிறு, அங்குள்ள இடம் என்று பதற்றத்துடன் சோதனை செய்வது அவனது அறியாமையை வெளிப்படுத்துகிறது.

## ஜோகி-சீலி பாசப் போராட்டம்

ஜோகி சீலி இருவரும் உருவத்தில் வேறுபட்டவர். உள்ளத்தில் ஒன்றுபட்டவர். சீலி இயற்கையாக வளர்ந்தப் புல்லைத்தின்று இயற்கையோடு வளர்ந்தது. ஜோகி இயற்கை அன்னையை தாயாக எண்ணி இயற்கையுடன் வளர்ந்தவன். இதனால் இருவருக்கும் தாய் சேய் உணர்வு படர்ந்தது. சீலி உரிமையாளரைக் கண்டால் முட்டும், பரிவுடன் பழகும் ஜோகியைக் கண்டால் பாசத்துடன் தலையாட்டி நுகரும். இத்தகு பிணைப்புடைய சீலிக்காக காவல்காரன் அரற்றுவான் என்று தெரிந்தும் அதை பொருட்படுத்தாது கோசு இலைகளை சாக்கில் ஒளித்து வைத்து கொண்டு வந்து தருவது அவனது பசுமை மாறாத அன்பை உணர்த்துகிறது. சீலியின் வாயில் ஊசி குத்திக்கொண்டதால் அவதிபடுத்துமோ என்று எண்ணி அவன் செய்த செயல்கள் எல்லையற்ற பாசத்தை வெளிபடுத்துகிறது.

“எழுந்து நின்று கொண்டு கூடிய தலையை இப்படியும் அப்படியும் அசைத்தது”2

என்று சீலி வேதனையுடன் ஜோகி படும் அவதியைக் கண்டு பேச வாயில்லாது கண்களில் வேதனை மலர வலி தாங்க முடியாது முனகியது இருவர்க்குமான பற்றினை வெளிப்படுத்துகிறது.

## பிஞ்சு நெஞ்சின் துணிவு

கவலையை காற்றில் விடும் வயதுடைய ஜோகி

“நெஞ்சில் இருக்கும் ஊசியால் சீலிக்கு இப்படியே பிராணன் போய்விடுமோ?...”3

என்று பயந்து முதலாளியின் முரட்டுக்குணத்தைப் பொருட்படுத்தாது அவரிடம் சூழ்நிலையை தெரியச் செய்து சீலியை காப்பாற்ற வேண்டும் என்கிற எண்ணம் கொட்டும் பனியில் அவனைப் புறப்பட வைத்தது பெருமைக்குரியது. பனிப்பயணம் அவனது உடல் உறுப்புகளை செயலிழக்க செய்தபோதும் சீலி படும் துன்பத்திற்கு காரணம் தானென்று எண்ணி அயராது சென்ற மனவலிமை மதிக்கத்தக்கது. மேலும் கண்டால் அச்சம் தரும் இருள், உடல் ஒடுங்கும் பனியைப் பொருட்படுத்தாது தன் உயிரையும் பொருட்படுத்தாது சென்று சுய நினைவில்லாது தவறி பள்ளத்தில் விழுந்த ஜோகியின் உள்ளம் போற்றத்தக்கது.

வெளியில் சென்று திரும்பும் வசுவின் மனநிலை

இன்றைய காலக் கட்டதில் பெண்கள் தங்களின் முயற்சியைக் கொண்டு பல்வேறு துறைகளில் முன்னேறி வருகின்றனர். அன்று ஆண்கள் மட்டும் இருந்த துறைகளில் இன்று பெண்களும் பணியாற்றுவது சற்று மகிழ்ச்சியளிக்கிறது. அந்த வகையில் வசு பகுதிநேரம் பணிபுரியும் இடத்தில் முதலாளியின் தவறான செயல் அவளை நிலைக்குலையச் செய்தது. செய்வது அறியாது திகைத்து பணியை விட்டு அஞ்சி ஓடும் வசுவின் மனநிலை தடுமாற்றத்தை சந்தித்தது. சாலைகளில் போக்கிரித்தனமாக வெட்டியாக இருந்து வருவார் போவாரைப் பற்றி பேசும் வீண் மனிதர்களின் குரோத வார்த்தைகள் அவளை மேலும் நடுக்கத்திற்கு உள்ளாக்கி வெளியில் நடக்கும் எண்ணத்திற்கு புள்ளி வைத்தது. தெருவோரம் உணவு உண்டுக் கொடிருந்தப் பிள்ளையை தாய் உள்ளத்துடன் வசு பார்க்கிறாள். குழந்தையின் தாய்

“இன்னா வயிறு இந்தப் பொட்டக்கயிதக்கு? ஒருவாச் சோறு வய்க்கவுடமாட்டேங்குதே?”4

என்று திட்டியது அவளை மானவேதனைக்கு உள்ளாக்கியது. பிள்ளைகள் உண்ணாவிட்டால் வருத்தம் தானாக உண்பது மகிழ்ச்சிக்குரியது என்பது மறைமுகமாக பெறப்படுகிறது. தன் குழந்தையை தான் அருகிலிருந்து கவனிக்க முடியாதது, தந்தை இருந்தும் உடனில்லாது இருந்த பிள்ளையை வாரி அணைக்கும் வசுவின் மனநிலை துயரமுடன் கூடிய பாசத்தை வெளிப்படுத்துகிறது.

## வாசுவின் மடமை

அன்றாட வாழக்கையை நடத்துவது இக்காலக் கட்டத்தில் சவாலுக்குரியது. அத்தகு சூழலில் வாழ்க்கைத் துணையைத் தேர்வு செய்வது கவனத்திற்க்குரியது. இல்வாழ்க்கைத் துணை என்பது அனைத்து சூழ்நிலையிலும் ஒன்றாக இருந்து கையாள்வதற்குரிய தகுதி உடையவராக இருப்பது அவசியம். வாழ்க்கைத் துணை படித்தவர், பொருளாதாரமுடையவர், அழகானவர் என்பதைக் காட்டிலும் பண்பானவரை தேர்வு செய்வது பொருத்தம். வசு தனது வாழ்க்கைத்துணை தேர்வு செய்வதில் படிப்பை மட்டும் மனதில் இருத்தி படிக்காதவனை அலட்சியம் செய்தது அவளது மடமையை உணர்த்துகிறது. படித்தவன் உத்தியோகத்தில் இருப்பவன் என்பதால் பண்பில், செயலில் உத்தமனா என்பதை அறியமறந்து மனதை பறிகொடுத்தது அவளது கண்மூடித்தனத்தை காட்டுகிறது. அவனது ஒழுக்கம் தவறிய நடவடிக்கை தெரிந்தும் வேகத்துடன் அவனை மணந்தது அவளது விழிப்புணர்வற்ற போக்கினை மேலும் சுட்டுகிறது. கட்டிய கணவனின் சரியில்லாப் போக்குகளை, பேச்சுகளை உள்ளே வருந்தி வெளியில் கண்டிக்காதத்தனம் அவளை தைரியமற்றவளாகக் காட்டுகிறது. தன்னுடைய ஒழுக்கக்கேடுகள் அனைத்தையும் மனைவிமீது ஏற்றிக் கூறி தனது தவறை மறைக்கும் கணவனது செயலுக்கு இரையாகி வருந்துவது அவளது மடமைத்தனத்தை படம்பிடித்துக் காட்டுகிறது.

## முடிவுரை

இவ்வுலக வாழ்க்கை ஒருமுறை. அவ்வாழ்க்கையில் அறிவை வளர்த்து அன்பு காட்டி வாழுதல் நலம். அவதரிக்கும் அனைத்து உயிர்களும் புவியில் வாழத் தகுதி உடையவர்கள். அதில் உள்ளவர் இல்லவர், மேலவர் கீழவர் என்பது இல்லாது இருப்பது சமத்துவத்தை நிலவச் செய்யும். சமத்துவம் வீட்டிலிருந்து துவங்க வேண்டும். வீட்டில் வளரும் பெண், ஆண் இருவரும் சமநிலையை அனைத்திலும் அடைய பெற்றோர்கள் குழந்தை வளர்ப்பில் உரிமை போன்றவற்றில் பாரபட்சத்தை கைவிடவேண்டும். இது பெரும்பான்மையான குற்றம், போராட்டங்களை குறைக்க வழிவகுக்கும்.

## References

Rajam Krishnan, (2007) Mutthukkal Patthu, Thilagavathi, Amrutha Publications, Chennai.

Rajam Krishnan, (2016) Short Stories, Rajam Krishnan, Gowra Publications, Chennai.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author have no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2026. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License